★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 32 ஷவ்வா 5 இதழ் 155

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16—7—83

## ராணுவம் சுட்டதில் இருவர் பலி!

### மீசாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரு இளைஞர்கள் பலியானார்கள்.

மீசாலை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று மாலை ஐந்தரை மணியளவில் மேற்படி சம்பவம் நிகழ்ந்தது.

இதுசம்பந்தமாக இராணுவ உயர் வட்டாரத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது: இராணுவத்தினர் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, சில இளைஞர்கள் இராணுவத்தினரைத் தாக்கினர் என்றும், எதிர்த்தாக்குதல் நடத்தியபோது இரண்டு இளைஞர்கள் பலியானார்கள் என்றும் இந்த இளைஞர்கள் காக்கிஉடை அணிந்திருந்தனர் என்றும், சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் எதிர்த்தாக்குதல் நடத்தியபோது சிலர் ஓடிவிட்டனர் என்றும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## பேராசிரியர் டேவிட் விவகாரம்: பாதுகாப்புஅமைச்சுஅறிக்கை

(கொழும்பு)

''இங்கிலாந்து ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பேராசிரியர் டேவிட் செல்பேர்ன் நாடு கடத்தப்பட்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் நடராசா திடீர் ராஜினாமா!

## "எனதுமுடிவு தமிழினத்துக்கு விடிவாக அமையட்டும்"

[ஏ. வி. மாணிக்கம்]

**யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் - முன்னாள் செனட்டர் திரு. சு. நடராசா யாழ். அபிவிருத்தி சபைத் தலைவர் பதவியில் இருந்தும், உறுப்பினர் பதவியிலிருந்தும், நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் நேற்று ராஜினாமாச் செய்தார்!**

யாழ் மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டம் நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமானபோது, சபையில் வந்து அமர்ந்த சபைத் தலைவர் திரு. சு. நடராசா, தமது ராஜினாமா பற்றி சபையில் அறிவித்தார். இக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. அ. மு. ஆலாலசுந்தரம் ஆகியோருட்பட அபிவிருத்திசபை உறுப்பினர்கள் பலரும் ராஜினாமாசெய்யவேண்டாமென்று ஆலோசனை கூறி, பணிவான வேண்டுகோள் விடுத்தபோதும், தலைவர் திரு. சு. நடராசா வேண்டுகோளை ஏற்கமறுத்துவிட்டார்!

ராஜினாமா பற்றி தலைவர் அறிவித்ததும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் முடிவு வரும்வரையாவது பதவியிலிருங்கள் என்று கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கேட்டுக்கொண்டபோதிலும் ''கூட்டணி முடிவு வரும் வரை நான் இந்த இடத்தில் இருக்கமுடியாது.'' என்று உறுதியாகக்கூறி கூட்டத்தை உடனடியாக சிலநிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

ஒத்திவைக்க முன்னர் தலைவர் திரு. சு. நடராசா பேசுகையில்: ''இன்று தமிழினம் இருக்கும் இக்கட்டான நிலையில் சுயமரியாதையுடன் இந்த ஆசனத்தில் தொடர்ந்து இருக்கமுடியாது. எனது முடிவை ஜனாதிபதிக்கு கடந்த 13ந் திகதி அனுப்பிவைத்துவிட்டேன்'' என்றார்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தின் ஆங்கிலபிரதியை சபையில் வாசித்தார். இதைத் தொடர்ந்து அவர் கூறியதாவது:-

''கடந்த 15 நாட்களாக தமிழ்பகுதிகளில் நடந்துவரும் சம்பவங்களை மனதில் கொள்ள வேண்டும். திருமலை விஷயத்

(8-ம் பக்கம் பார்க்க)

## "தன்மானத்தோடு தமிழர் வாழமுடியாத சூழ்நிலை"

### ஜனாதிபதிக்கு 'நடா' மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் வருமாறு:

(கடந்த 13ம் திகதி இந்த மகஜரை அவர் அனுப்பிவைத்துள்ளார்.)

''தமிழ் மக்கள் சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள தாங்கள் எடுத்துவந்த முயற்சிகளுக்காக முதலில் பாராட்டுத் தெரிவிக்கின்றேன்

''உங்கள் அழைப்பின் மீது 1982 நவம்பர் நான் உங்களைச் சந்தித்தபோது நான் தமிழ் மக்களின் முக்கிய குறைபாடுகளை எடுத்துக்காட்டி அவைகளை நல்லமுறையில் எப்படித் தீர்க்கலாம் என்ற கருத்தினை எடுத்துரைத்தேன். அதே சமயம் நாம் ஒரு நெருக்கடியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம் என்பதையும், பிரச்னைகளுக்கு பரஸ்பரம் திருப்தியான, அமைதியான ஒரு தீர்வுகாணவேண்டிய காலம் உருவாகிவிட்டது என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

''1977ல் நடைபெற்ற தேர்

(8-ம் பக்கம் பார்க்க)

## அல்வாய் உபதபால் அலுவலகத்தில் துப்பாக்கி முனையில் கொள்ளை!

(கரவெட்டி)

அல்வாய் உப தபாற் கந்தோருக்குச் சென்ற மூன்று இளைஞர்கள் துப்பாக்கிமுனையில் தொலைபேசியை அடித்து நொருக்கிவிட்டு, 2000 ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30மணியளவில் சென்ற இளைஞர்களில் ஒருவர் துப்பாக்கியும், இருவர் கத்தியும் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

யன்னலூடாகத் துப்பாக்கியைக் காட்டி உப தபாலதிபரையும், ஊழியர்களையும் பயமுறுத்தி இளைஞர்கள் உள்ளே சென்றதாக விசாரணையில் கூறப்படுகிறது.

துப்பாக்கி வைத்திருந்தவர் வெளியில் நின்று கண்காணிக்க உள்ளே சென்ற இருவரில்

[8-ம் பக்கம் பார்க்க

## யாழ். மாணவர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் மாணவர்கள் வரவு மிகவும் குறைவாக இருந்ததால் வகுப்புகள் நடைபெறவில்லை.

கிராமப்புறப் பாடசாலைகளில் மாத்திரம் சிறு தொகையான மாணவர்கள் வகுப்புகளுக்கு சமூகமளித்திருந்தனர்.

திருமலை அசம்பாவிதங்கள் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் காரணமின்றித் தாக்

(8-ம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழர் பிரச்னை:

## "தீர்வுகாண்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்"

### ராஜீவ்காந்தி கூறுகிறார்

சென்னை ஜூலை.15

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு உரிய தீர்வு காண்பதற்குத் தன்னாலான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாக இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ராஜீவ் காந்தி சென்னையில் தெரிவித்துள்ளார்.

பெருந்தலைவர் காமராஜரின் 81-வது பிறந்ததின விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

''தென் இந்திய மக்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## வட்டுக்கோட்டை தபாலகமும் தாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தபால் அலுவலகம் தாக்குதலுக்குள்ளானதுடன் சுமார் 800 ரூபா ரொக்கப்பணத்தையும் கொள்ளையர் எடுத்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல்

(8ம் பக்கம் பார்க்க)


குவைத்தில்

## வேலைவாய்ப்பு

குவைத்தில் உள்ள உணவு விநியோக கம்பெனி ஒன்றில் (CATERING COMPANY) பல்வேறுதுறைகளிலும் கடமையாற்ற, உடனடியாக ஆட்கள் தேவை. வேலைகோரி விண்ணப்பிப்போர் தங்களது விண்ணப்பத்துடன் (இரண்டு பிரதிகள்), கல்வித்தகைமை மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன், பாஸ்போர்ட் 'போட்டோ ஸ்ரட்' பிரதியும், அண்மையில் எடுக்கப்பட்ட இரண்டு புகைப்படங்களுடன் உடன் விண்ணப்பிக்கவேண்டும்.

வேலைவாய்ப்பும், வேலையாட்கள் தொகை விபரமும்:

| | | |
|---|---|---|
| (1) | அதிபார வாகனச் சாரதிகள் | - 10 |
| (2) | இலகு வாகனச் சாரதிகள் | - 30 |
| (3) | பிளம்பர்ஸ் | - 15 |
| (4) | கூலியாட்கள் | - 80 |
| (5) | பிரதம சமையற்காரர்கள் | - 20 |
| (6) | உதவிச் சமையற்காரர்கள் | - 10 |
| (7) | மாவினால் தயாரிக்கப்படும் உணவுவகை சமையற்காரர்கள் | - 02 |
| (8) | மாவினால் தயாரிக்கப்படும் உணவுவகை உதவியாளர்கள் | - 02 |
| (9) | கசாப்புக்காரர்கள் | - 02 |
| (10) | உதவி கசாப்புக்காரர்கள் | - 02 |
| (11) | விநியோக உதவியாளர்கள் | - 200 |

உங்கள் விண்டப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

**INTER TRADE AGENCIES**

23, ALOE AVENUE,
COLOMBO-3

தொழிற்பதிவு இல: 199
தொழில் அங்கீகாரம்: FE/6/FEA/181 4119

(7958)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

குடியிருக்க வசதியானதும், பாடசாலை, மின் வசதியுள்ளதுமான 8 பரப்புக் காணி மட்டுவில் தெற்கில் நுணுவில் பருத்தித்துறை செல்லும் வீதிக்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- செ. குமாரசாமி (இளைப்பாறிய பொலிஸ்), மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 7929

பரந்தன் D, ஐந்தாம் வாய்க்கால் என்னுமிடத்தில் 7 ஏக்கர் நெற்காணி இரு போகம் செய்யக்கூடிய நீர்ப்பாசன வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி, ஜே. பி. யூ. எம். 9, கண்டி வீதி, சாவகச்சேரி, தொலைபேசி: 262. 7963

யாழ்ப்பாணம் · நல்லூர் செம்மணி வீதி 98ம் இலக்கத்தில் கல்விக்கந்தோருக்கு முன்பாக வீடு கட்டுவதற்குரிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு நேரில் வரவும். 7970

கோண்டாவில் மேற்கு குமர தோட்டம் (பெரியபுலம்) என்னும் இடத்தில் வீடு கட்டுவதற்கு பாதை, தண்ணீர் போன்ற சகல வசதிகளும் உள்ள 2¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி:- க. சின்னத்துரை, குலமணி தம்பதிகள், கரந்தன் மேற்கு, நீர்வேலி. 7989

மீசாலை பழைய ஸ்ரேசனுக்கு அருகாமையில் 7 பரப்புக்காணி உடன்விற்பனைக்குண்டு. வைத்தியசாலை அமைக்கவோ அல்லது தொழிற்சாலை போடவோ அல்லது வீடுகள் கட்டவோ சிறந்த காணி. தொடர்பு:- வா. வீரவாகு, சாவகச்சேரி வடக்கு, மீசாலை. 7992

யாழ். நகரிலிருந்து மூன்று மைல் தூரத்தில் குளப்பிட்டி சந்தியிலிருந்து ஆனைக்கோட்டை போகும் பஸ் போக்குவரத்து உள்ள பாதையில் றோட்டருகே 2 பரப்பு அல்லது 1½ பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளவும். V. V. M. and Son, 391, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:- 23056, N. அருள், மஸ்கன் லிமிட்டெட், 175, ஆமர் வீதி, கொழும்பு-12, B. Sri Varatharajan, Pharmacist, S. H. S. Office. Vavuniya. 7994

மல்லாகம் நீதிமன்ற வீதியில் அமெரிக்கன் மிஷன் · பாடசாலைக்கு அருகாமையிலுள்ள தெங்கு பனம்பொருள் கூட்டுத்தாபனக் கந்தோருக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் 2-வது காணியாக சகல வசதிகளுடன் 6 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: Mr. மாணிக்கசுந்தரம், குமரகோட்டம், நீதிமன்ற வீதி, மல்லாகம். 7920

யாழ். கேரதீவு வீதியில் நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: தி. தருமலிங்கம், கைதடி நுணுவில், சாவகச்சேரி. 7925

## விற்பனைக்கு

கொடிகாமம் - பருத்தித்துறை றோட்டில் ஒன்றரை ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டக்கூடியதும் தென்னை, மா, பலா, பயிரிடக்கூடியதும் மின்சார வசதியும் உள்ளது. தொடர்புகொள்க: கிராமசேவைஅலுவலர், கொடிகாமம். 7914

## தேவை

கைத்தொழில் நிறுவனம் ஒன்றிற்கு உதவி மேற்பார்வையாளராகக் கடமைபுரிவதற்கு A/L சித்தியடைந்த பெண்கள் தேவை. வி. மு. திகதி: 21-07-83 இற்குள் விண்ணப்பிக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி: விளம்பர இல: 7986, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 7986

கார். திறமான நிலையிலுள்ள பேயோ 404 (Full Saffari), ரொயாரா K. E. 20 அல்லது 30. விபரங்கள்:- Jaffna Property Trades Ltd., 3, Model Market (Upstair), Jaffna. Phone:- 23698, 23058. (7993)

யாழ்ப்பாணம், மானிப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், திருநெல்வேலி பகுதியில் வீடு கட்டக்கூடிய காணி தேவை. மூன்று பரப்பளவில் இருக்கவேண்டும். முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7964, மே பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (7964)

## வாடகைக்கு

யாழ். பெரிய கடைக்கு ஒரு மைல் சுற்றுடலில் ஒரு பகுதி வீடு (Annexe) அல்லது ஒரு விசாலமான அறையுடன் சேர்க்கப்பட்ட குளியலறை வசதிகளுடன் ஒருவருக்குத் தேவை. விபரங்கள்:- Jaffna Property Trades Ltd., 3, Model Market (Upstair) Jaffna. Phone:- 23698, 23058 7991

## பொங்கல் விழா

(சரவணை)

புங்குடுதீவு- தென்கரை, கண்ணகைபுரம். ஸ்ரீபத்திரகாளி அப்பாள் ஆலயத்தில் வருடாந்தப் பொங்கல் விழா நடைபெற்றது.

## இன்று நடக்கும் தொழிற் சங்கக் கூட்டம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் மாவட்ட விசேட சேவை அலுவலர்களின் தொழிற் சங்கக்கூட்டம் இன்று சாவகச்சேரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தின் போது விசேட சேவை அலுவலர்களை முன்நோக்குகின்ற பிரச்னைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாக தொழிற்சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## வருடாந்தஉற்சவம்

(சரவணை)

சரவணை- தேவபுரம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இம்மாதம் 25ம் திகதி தேர்த்திருவிழாவும், மறுதினம் தீர்த்தவிழாவும் நடைபெறும். 27ந் திகதி நடைபெறும் திருக்கல்யாணவிழாவுடன் திருவிழா முடிவடையும்.

## கூட்டுறவுப் பயிற்சி நெறி

(துணுக்காய்)

1983ம் வருட கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறிக்கு ஆட்களைசேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அவைக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன.

இப்பயிற்சி நெறியில் சங்கப் பணியாளர்களோடு தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் கலந்து கொள்வார்கள். யாழ்ப்பாணம், பரந்தன், முல்லைத்தீவு வவனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய கூட்டுறவுக் கல்லூரிகளிலும் இப்பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

## "கல்வியின் ஒரு பகுதி விளையாட்டு!" - வட்டாரக் கல்வி அதிகாரி

(அரியாலை)

"அறிவு, அழகு, ஆற்றல் ஆகிய மூன்றையும் நிரம்பப் பெற்றவனே நிறை மனிதனுவான். விளையாட்டும் கல்வியின் ஒரு பகுதியாகவே இன்று இருக்கின்றது. இதனைப் போலவே கலை, கலாசாரமும் கல்வியின் பகுதியாக விளங்குகின்றன. இக்கல்லூரிக்கு விளையாட்டு மைதானம் இல்லாத பெரும் குறையொன்று உண்டு. இதனை நிவிர்த்திசெய்ய என்னுலான உதவிகளை நான் செய்து தருகிறேன்."

இவ்வாறு நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துபொண்ட வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. ப. கணபதிப்பிள்ளை எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில், மாணவர்களிடையே மறைந்திருக்கும் சக்தியையும், திறமையையும் வெளிக்கொணர விளையாட்டு உதவுகிறது. கல்வியில் மட்டுமல்ல; விளையாட்டுத் துறையிலும் மாணவர்கள் போதிய திறமை காட்டவேண்டும் என்று குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. த. பஞ்சலிங்கம் நன்றி கூறினார்.

இவ்வித்தியாலயத்தின் இல்லங்களுக்கிடையிலான போட்டியில் தனிநாயகம் இல்லம் சம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டது.

## நெடுந்தீவுக்கு வரும் வெளியூர் மீனவர் பிரச்னை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு தெற்கு கடற்கரையில் உள்ள வெல்லை என்னும் இடத்தில் வருடாவருடம் வெளியூர் மீனவர்கள் காலபோக மீன்பிடிக்காக வந்து மூன்று நான்கு மாதங்கள் தங்கி இருந்து மீன்பிடித்துச்செல்வது வழமை. இவர்கள் தங்கும் கொட்டில்கள் நெடுந்தீவு மக்களாலேயே அமைத்துக்கொடுக்கப்பட்டன. ஆனுல் எதிர்வரும் காலங்களில் அக்கொட்டில்களை அரசாங்கமே ஒப்பந்தகாரர் மூலம் அமைத்துக் கொடுக்கவேண்டுமென நெடுந்தீவு பிரதேசசபைக் கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது. இதனுல் அமைக்கப்படும் கொட்டில்கள் ஒழுங்காகவுகவும் கட்டுப்பாட்டுடனும் அமைவதோடு வெளியூர் மீனவர்களுக்கு வசதியாகவும் இருக்கும் 82ம் ஆண்டுபோடப்பட்ட கொட்டில்கள் இதுவரை சில அகற்றப்படாமல் இருப்பதால் அவற்றை காலதாமதம் செய்யாமல் அகற்றுவிட்டால் அவற்றை ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறியப்படுகிறது.

## நடப்பு வருட நிர்வாகிகள்

(கரவெட்டி)

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டம் நடைபெற்ற போது பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்: அதிபர் திரு வி. தணிகாசலம், உபதலைவர்: மா. சிவபாதம், செயலாளர்: கி. கணேசன், பொருளாளர்: செ. கணேசன்.

## ஒளி பெற்றது

(கரவெட்டி)

நீண்டகாலமாக இருளில்மூழ்கிக் கிடந்த நெல்லியடி கரவெட்டிப்பகுதி ஒளி மயமாகியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபையின் நெல்லியடி உப அலுவலகத்துக்குட்பட்ட பல வீதி மின் குமிழ்கள் பழுதடைந்தும் கவனிக்கப்படாமையினுலேயே இவ்வளவு காலமும் இருள் சூழ்ந்த நிலையில் இப்பகுதி இருந்தது.

இவ்உப அலுவலத்தின் புதிய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் திரு எஸ். சண்முகநாதனின் துரித நடவடிக்கையால் புதுக்குமிழ்கள் இணைக்கப்பட்டுள்ளன,


பெண் நெசவாளர் தேவை

மின்தறியில் அல்லது கைத்தறியில் அனுபவம் உள்ளவர்களுக்கு எமது தொழிற்சாலையில் வேலை வாய்ப்பு உண்டு. தகமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

25-7-83 ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

சீமா சில்க் இண்டஸ்ரீஸ் லிமிட்டற்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
7987



யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குறெஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA).

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவானுலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PVT)LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

# "வரதட்சணைக் கொடுமைகளுக்கெதிராக வலுமிக்க கருத்துக்கள் தேவை!"

— இந்தியப் பிரதமர் இந்திரா

## பெண்கள் திறமைகள் பிரகாசிக்கவேண்டுமெனவும் வலியுறுத்து

புதுடில்லி, ஜூலை 15

''பெண்குலத்துக்கு எதிரான வரதட்சணைக் கொடுமையை எதிர்த்து வலுமிக்க கருத்துக்களை உருவாக்கவேண்டும். அத்துடன் இக் கொடுமைகளால் ஏற்படும் பலாபலன்களை மக்களுக்கு எடுத்துக் கூறி மகளிர்நிலை உயர்வடைய வழிவகுக்கவேண்டும்''

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இந்திய மாநில சமூகநலத்துறை அமைச்சுக்களின் மகாநாட்டில் நேற்று உரையாற்றுகையில் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ''பெண்குலத்தை பாதுகாப்பற்றதாக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் நல்ல மாற்றங்கள் தேவை. சகல துறைகளிலும் பெண்கள் சம வாய்ப்புக்களைப் பெற்றிருத்தல்வேண்டும். இத்துடன் அவர்களின் திறமைகள் நன்கு பிரகாசிக்கும்வகையில் விளங்க வேண்டும். ஆகையினுல் அவர்களை சமூகத்தில் மிக உயர்வான நிலையில் கொண்டுவரும் வகையில் சமூகநல ஸ்தாபனங்கள் அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து பேசுகையில், வரதட்சணை கொடுமைகளால் பெண்குலத்துக்கு பெரும் துன்பங்கள் ஏற்படுகின்றனவென்றும், இக் கொடுமைகள் மிகவும் அநாகரிகமானவையென்றும், எதிர்காலத்தில் இவற்றுக்கெதிராக தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் கூறினர்.

ஜனதிபதி திரு. ஸெயில்சிங் இம் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் கூறியதாவது: ''பெண்கள் வரதட்சணைக் கொடுமை காரணமாக உயிரோடு தீக்கிரையாக்கப்படுவது பெரும் கொடிய செயலாகும். இதனைஒழித்துக்கட்ட சகல பொதுநல ஸ்தாபனங்களும் முற்படவேண்டும். இத்தகைய செயல்களால் பாரதம் முழுவதற்கும் பெரும் இழுக்கு ஏற்படுகின்றது'' என்ருர். (கி)

# தமிழீழ விடுதலைக் கைதிகளை விடுவிக்க தமிழகத்தில் கோரிக்கை

சென்னை, ஜூலை 15

தமிழ்ஈழ விடுதலைக்காகப் போராடி அதனுல் சிறைப் படுத்தப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கட்சித் தலைவர்களும் பொது மக்களும் குரல் கொடுக்க வேண்டும் என்று தமிழ்ஈழ மக்கள்விடுதலைக் கழகம் ஈழ புரட்சி அமைப்பு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஆகியவை கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கை அரசால் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியவற்றை திரும்பப்பெற வற்புறுத்த வேண்டும். தமிழ்

(7-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் 10வது வகுப்பில் சத்துணவு பாடம்

சென்னை, ஜூலை 15

தமிழக முதல்வர் எம்.ஜி. ஆரின் சத்துணவுத்திட்டம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று தமிழ்நாடு புத்தகநிறுவனம் வெளியிட்டுள்ள பத்தாவது வகுப்பு இந்திய சரித்திரப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது.

அடுத்தாண்டு மே மாதம் 10வது வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவர்கள் சத்துணவுத் திட்டத்திலிருந்து ஒரு கேள்வியை எதிர்பார்க்கலாம்.

## 'அகாலிகள் பிரச்னை தீர்வுக்கு மத்திய அரசு தயார்!'

— அமைச்சர் சேத்தி

புதுடில்லி, ஜூலை 15

''அகாலிகள் பிரச்னைகளைத் தீர்க்க மத்திய அரசு எப்போதும் தயாராக உள்ளது. ஆனுல் அவர்கள் சுமுக முடிவுகளை விடுத்து வன்முறைகளில் இறங்குவது வருத்தத்தைத் தருகின்றது'' என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. பி.சி. சேத்தி கூறினர்.

திரு. சேத்தி தமது அமைச்சு ஆலோசனைக்கமிட்டி கூட்ட மொன்றிலேயே மேற்கண்டவாறு கூறினர். பஞ்சாப் மாநில தீவிரவாதிகளின் பிரச்னைகள் பல தீர்க்கப்பட்டுள்ளன. ஒருசில மட்டுமே தீர்க்கப்படாதுள்ளன. அவற்றைத் தீர்க்க இந்திய அரசு எப்போதும் தயாராகவுள்ளது'' என்ருர்.

இக் கூட்டத்தில் மத்திய அரசு மாநில அரசுகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதை பின்போடாது, உடனுக்குடன் அவற்றைச் சமாளிக்கவேண்டுமென எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளதையும், அமிர்தஸரஸ் பொற்கோயில் மற்றும் ஏனைய பஞ்சாப் ஆலயங்களில் குற்றவாளிகளுக்கு புகலிடம் கொடுக்கப்பட்டுள்ளதை அவை ஆட்சேபித்துள்ளதையும் தெரிவிக்கப்பட்டது. (கி)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு: ரூ.16லட்சம்மோசடி

சென்னை ஜூலை 15

மலேசியா, சிங்கப்பூர், பினுங்கு போன்ற தென்கிழக்கு ஆசியா நாடுகளில் வேலை வாங்கித்தருவதாககூறிதஞ்சை மாவட்டத்தைச்சேர்ந்த நானூறு பேரிடம் ஏறத்தாள பதினறு லட்ச ரூபாய் பெற்று மோசடி செய்ததாக ஒருவரை மாநில குற்றப்புலனய்வுத் துறை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்தமோசடி தொடர்பாக மேலும்சிலர் தேடப்பட்டு வருவதாக குற்றப்புலனய்வுத் துறை பொலிசார் தெரிவித்தனர். இது குறித்து பொலிஸ் தரப்பில் கூறப்படுவதாவது;

தஞ்சை மாவட்டத்தில் வெற்றிவேல் ஏஜென்சி என்ற பெயரில்ஒரு நிறுவனம் நடைபெற்று வந்தது. மலேசியா, சிங்கப்பூர், பினுங்கு போன்ற வெளிநாடுகளில் நல்ல ஊதியத்தில் வேலை வாங்கித்தருவதாக இந்தஏஜென்சியினர் கூறிவந்தனர். இதறகாக நானூறு பேரிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டது. ஒவ்வொருவரிடமிருந்தும் தலா நாலாயிரம் ரூபாய் வீதம் பதினறு லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது.

பணத்தை கொடுத்தவர்கள் இந்த நிறுவனத்துக்கு, சென்று வேலை கேட்டு அலைந்தார்கள். இவர்கள் அலைக்கழிக்கப்பட்டதுதான் மிச்சம்.

இந்த நிறுவனத்தில் மூளை பலம் என்று கருதப்படும் ஜெயபாலன் (வயது 35) என்பவரை பொலிசார்கைது செய்தனர்.

(7-ம் பக்கம் பார்க்க)

## போலந்தில் எதிர்வரும் வெள்ளி இராணுவச்சட்டம் நீக்கம்?

வொர்ஸோ, ஜூலை 15

போலந்தில் இராணுவச் சட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நீக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. போலந்து அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

சில தினங்களுக்கு முன்னர் இராணுவ ஆட்சிவிரைவில் நீக்கப்படுமென போலந்து அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆயினும் எப்போது என்பது பற்றி எதுவும் அறிவிக்கவில்லை.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அதாவது இம்மாதம் 22ந்தேதி போலந்து நாட்டின் தேசிய தினமாகும். எனவே அத்தினத்திலேயே சுமார் ஒன்றரை வருடகால இராணுவ ஆட்சியும் நீக்கப்படுமென்று அறியப்படுகிறது.

இராணுவ ஆட்சி நீக்கப்படவிருப்பதையடுத்து அரசியல் சட்டங்களில் சில முக்கிய திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. இத்திருத்தங்கள் நெருக்கடி நிலைகளைச் சமாளிக்கும் வகையில் அமைந்திருக்குமென்றும், பொலிசாரின் அதிகாரங்களை ஒருமைப்படுத்துவதாகவும் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எது எவ்வாருயினும் சுதந்திர தொழிற்சங்கமான 'சொலிடாறிற்றி' மீது விதிக்கப்பட்ட தடைநீக்கப்பமாட்டாதென்றே தெரிவிக்கப்பட்டது, (கி)

## 'அண்ணுகழகம்'-தமிழகத்தில் புதியகட்சி ஆரம்பம்

சென்னை, ஜூலை 15

அகில இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்கழகத்தில் இருந்து இராஜினமாச் செய்த திரு. அடியார் புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளார்.

இக்கட்சியின் பெயர் அண்ணு கழகமாகும். நிருபர்களிடம் இப்புதிய கட்சி பற்றி அவர் தெரிவித்தபோது முழுக்க முழுக்க அண்ணுவின் கொள்கைகளைக் கடைப்பிடித்து இக் கட்சி இயங்குமென்று கூறினர்.

பூரண மதுவிலக்கு, ஒரு ரூபாவுக்கு ஒருபடி அரிசி, வன்முறை ஒழிப்பு என்பன தாம் கொள்ளவிருக்கும் அறிஞர் அண்ணுவின் முக்கிய இலட்சியங்களில் அடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அண்ணு தி. மு. க, தி.மு.க. ஆகியன அறிஞர் அண்ணுவின் கொள்கைகளிலிருந்து பெரிதும் வேறுபட்டுச் செல்கின்றன என்றும் ஆகையினுலேயே தாம்புதிய கட்சி ஆரம்பித்துள்ளதாகவும் திரு. அடியார் கூறினர். (கி)


மற்றவைகளைவிட மிகவும் மாறுபட்டது

புதிய சிங்கர் சீலிங் விசிறிகள்





தரத்திற்கும் ஆற்றலுக்கும் உலகப்புகழ்பெற்ற சிங்கர் என்ற பெயர் போதுமானது.

சிங்கர் சீலிங் விசிறிகளுக்கு விசேஷ அம்சங்கள்

ரோட்டரி ரிமோர்ட் ச்சோக் ரெகுலேட்டர் மிகவும் குறைந்த மின் விரையம்.

சிங்கள் சீலிங் விசிறிகளுக்கு விற்பனைக்குப் பின் அற்புதமான பராமரிப்புச் சேவையுண்டு.

சிங்கரின் சுலபான கட்டுத்தவணைத்திட்டத்தில் வாங்கலாம் வாங்குவதற்கு உன்னதவழி.

விலை ரூ. 1725/-

சிங்கர் (இலங்கை) லிமிட்டெட்

SINGER

### மணிவாக்கு

எங்கள் விந்தையுலகில் செல்வர்களான அந்நியர் உறவினராகவும், வறுமையுற்ற உறவினர் அந்நியராகவும் ஒரேநாளில் மாறிவிடுகின்றனர்.

— நீதிநூல்

# மன்னார் மாநில மகாநாடு ஏற்பாடுகள் துரிதம்

(மன்னார்)

மன்னாரில் வரும் 23ம், 24ம் திகதிகளில் நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மகாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மகாநாட்டிற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கென 45 பேரடங்கிய நிதிக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மகாநாடு தொடர்பான சகல பிரசார வேலைகளையும் மேற்கொள்ளவென பிரசாரக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

இத்துடன் மகாநாட்டிற்கு எனத் தொண்டர் குழுவொன்றும், மகாநாட்டு மேடை, பந்தல் என்பனவற்றிற்குப் பாதுகாப்பளிக்கவெனப் பாதுகாப்புக் குழுவொன்று விரைவில் தெரிவு செய்யப்படும்.

மகாநாட்டில் கலந்துகொள்பவர்களுககு வேண்டிய குடிநீரை வழங்குவதற்கெனத் தண்ணீர் தாங்கிகள் பல வைக்கப்பட்டுப் போதிய குடிநீர் தேக்கிவைக்கப்படும்.

### கூட்டணி எம். பி.க்களுக்குக் கடிதம்

மன்னாரில் நடைபெறும் மாநில மகாநாட்டில் கலந்து கொள்பவர்களின் தொகை, இவர்களில் எத்தனை பேருக்கு தங்குமிட வசதி, உணவு வசதி செய்துதரவேண்டுமென்ற விபரங்களை உடன் அறிவிக்கவும் என்று கூறும் கடிதம் ஒன்றினை மன்னார் மாநில மகாநாட்டுக் குழு சகல தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்களுக்கும், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

### அனுமதி கிடைத்தது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மகாநாட்டுக்கான அனுமதி பெறப்பட்டுள்ளது என்ற தகவலை எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மன்னார் மாநில மகாநாட்டுச் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

# நமது நோக்கு

## பிள்ளையாராய் முடியுமா?

பயங்கரவாதத்தை ஒழிக்கவட்டமேசை மாநாடு கூட்ட அரசு ஆயத்தம் செய்கிறது.

'வட்டமேசை' என்றதும் இப்பதத்துக்கு நேர்ந்த கதிமனதை வாட்டுகிறது. நன்றாய் அடிபட்டுத்தேய்ந்து தும்பு தும்பாகக் காணப்படும் உடைபோன்றது.

தமிழர் பிரச்னைக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட மேசை இது. எவரும் இன்று வரைக்கும் காண முடியவில்லை. பாராளுமன்றத்தலைவர்களில் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்கு மிகப் பிடித்தமானது வட்டமேசை-

எத்தனை முறை அவர் இவ்வித மகாநாடு கூட்ட வேண்டுமென்று பிரயத்தனம் செய்தாரென்பது பலருக்கும் தெரியும்.

ஐ. தே. கட்சிக்கும் இதில் ஓரளவு நம்பிக்கை இருந்து வந்தது. இன்றைய ஜனாதிபதி 1977 பொதுத்தேர்தலில் இதனையே தமிழர் தொல்லைகளுக்குத் தீர்வாக குறிப்பிட்டார்.

எனவே இன்றாவது வட்டமேசை மகாநாடு என்றால் தமிழ்மக்களின் நெடுங்காலம் பாக்கியாயிருந்த பிரச்னைகளுக்கு முடிவு காணும் முறையென்றே நாம் நம்பியிருந்தோம்.

வட்டமேசை யென்றவுடன் பிரச்னைகள் எல்லாம் மேசைபோல் நல்ல முறையில் 'ஷேப்' பண்ண முடியுமென்பதல்ல.

பால் ஆட்டுடன் வட்டமேசை மகாநாட்டுக்கு லண்டன் சென்ற மகாத்மா காந்தி திரும்பிய போது பம்பாய்த் துறைமுகத்தில் கையை விரித்து வெறுங் கையுடன் வந்தேன் என்றார்.

இருப்பினும் அதில் தோல்வியடைந்த மகாத்மா ஒத்துழையாமை இயக்கத்தைத் துரிதப்படுத்தி இந்திய உபகண்டம் சுதந்திரம் பெறுவதற்கு பதினாறு வருடம் சென்றது பெரு வெற்றியென்றே கொள்ள வேண்டும்.

இன்று அரசு கூட்டவிருக்கும் வட்டமேசை மகாநாடு தமிழர் விவகாரங்களுக்குத் தீர்வு காணவல்ல என்றவுடன் பலருக்கு கட்சிகள் உட்பட நாடி விழுந்திருக்கிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பயங்கரவாதம் ஒழிப்பதற்காக வட்டமேசை மகாநாடா? .

நியாயமான ஆச்சரியம் நிறைந்த கேள்வி இது. கல்யாண வீட்டுக்கு அழைப்பென்று கருதி உடையலங்காரம்செய்த ஒருவருக்கு, அதல்ல மற்றதென்றால் என்ன ஏமாற்றம்?

எம்மைப் பொறுத்தளவில் 'வட்டமேசை' என்பதில் ஒரு தனிமதிப்பு; அதனை அவசரப்பட்டுப் பகிஷ்கரிப்பதா?

நெடுங்காலம் பேசப்பட்ட பொருள் எவ்வாறு காணப்படுகிறதென்று பார்த்தல் தவறா?

பிள்ளையாரைப் பிடிக்க பெருச்சாளியாய் முடிகிறது எவ்வளவு இயற்கையோ அதேபோல பெருச்சாளியைப் பிடிக்க பிள்ளையார் உருவெடுக்கவும் கூடும். 'ஒன்றை நினைக்க அதுஒழிந்திட்டொன்றாகும்அன்றிஅது வரினும் வந்தெய்தும்' நோக்கத்தை சற்றே விரிவுபடுத்தினால்இன்றைய நெருக்கடி இலகுபட இடமுண்டு.

ஆளுங் கட்சிக்கும் பிள்ளையாருக்கும் நல்ல பொருத்தம் உண்டு. ஆனையும், ஆனைமுகனும் ஓரினம்; அதே சமயம் இவ்விருபேர்களும் விக்கினங்களைவளர்க்கவும் கூடும்.

நாம் பாரதூரமான விடயத்தை விகடமாகப் பேசவில்லை. திருகோணமலை எரியும்போதுவீணைவாசித்த அரச நிர்வாகத்தைப் பின்பற்றும் நோக்கம் எமக்கில்லை.

தமிழர்கள் தொடர்பாக என்னவிடயமும் வட்டமேசையில், நாட்டின் அரசியல்கட்சிகள் சார்பில் பேசப்பட்டாலும் - பயங்கரவாதம் தானும் - கலகம் பிறக்கும்; எனவே நியாயம் பிறக்க இடமுண்டு.

ஆசைவெட்கமறியாதெனப் பலர் நினைக்கக் கூடும், அப்படியல்ல அவ்வாறொருமகாநாடு கூட்டப்பெற்றால், நியாயம் விரும்பும் பிரதிநிதிகள் 'இஃதென்னபயங்கரவாதம் இது எவ்வாறு இந்தநிலைமைக்கு வந்தது? தமிழ் மக்களின் தீர்ந்தமுடிவு என்ன? நாம் எவ்வளவுதூரம் அதனைப் பூர்த்தி செய்யலாம்.

இருபக்கமும் போரை நிறுத்த என்ன நிபந்தனை இடலாம்? பிள்ளையார் பிடிப்பதில் அரசு அரசியல்சாதுர்யம் காட்ட ஒரு அரியவாய்ப்பு இது.

பயங்கரவாதமும் அதன் தொடர்பான விடயங்களும் என்ற திருத்தத்தைநிகழ்ச்சிநிரலில் மாற்றம் செய்யலாம்.

இவ்விடயத்தில் கைதேர்ந்த திருமதி பண்டாரநாயக்காவை எவ்வகையிலும் குடியுரிமை வழங்கி மீண்டும் எம்பியாக்கலாம்; ஏன் எதிர்க்கட்சியினர் முன்வந்தால் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக்கினாலும் என்னநட்டம்?

தமிழ் மக்களின் மிகப் பெரிய பாரதூரமான நீண்டகாலப் பிரச்னைக்கு முடிவுகாண வேண்டுமானால் இவ்விதபூரண ஜனநாயக அமைப்பில் தான் அது கைகூடும்.

நாடு நடுநிலைமைக்குத் திரும்பும்.

# மக்கள் கருத்து

## படாடோபம் வேண்டாம்!

யாழ். கந்தர்மடம், அதைத் தொடர்ந்து வவனியா, அதைப் பின்பற்றி திருகோணமலை எரிந்த சுவாலை இன்னும் தணியவில்லை. குழந்தைகள், பெண்கள் இளைஞர்கள், முதியோர் என்ற வேறுபாடின்றி கோடூரமானமுறையில் கொலை செய்யப்பட்ட தமிழ்மக்களின் இரத்தம் இன்னமும் காயவில்லை. தமிழ்ப் பிரதேசங்களில் எம் இளைஞர்கள் சுதந்திரமாக வீதியில் நடமாடமுடியாத அவலநிலை. காலையில் தொழிலுக்குச் சென்ற குடும்பத் தலைவன், நல்லூருக்குச் சென்ற பிள்ளை வீடு திரும்பும் வரையில் இல்லத் தலைவி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்ட அவதியுடன் படலையையே பார்த்துக்கொண்டு பரிதவித்து நிற்கும் பரிதாப நிலை - இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்களுக்குத் தலைமைதாங்கும் ஒரு கட்சி, தமிழரின் அவலநிலையை அகற்ற வழிவகை காணும் வகையில் கூடும் மாநில மாநாடு ஆடம்பரத்துடன் படோடோபமாக நடத்தப்படுவது அவசியம் தானா? ரூபா 50,000 செலவு செய்ய வேறுவழியே இல்லையா? மாநில மகாநாட்டை ஒழுங்குசெய்யும் மன்னார்க் கிளை த. வி. கூட்டணியினருக்கும் கட்சியின் பெருந் தலைவர்கட்கும் பணிவாக விடுக்கும் வேண்டுகோள் தயவுசெய்து அலங்காரப் பந்தலுக்குச் செலவுசெய்யும் ரூபா 50,000மும் திருமலை அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கு அன்பளிப்புச்செய்யுங்கள். கலை நிகழ்ச்சிகள், களியாட்டங்கள் எல்லாவற்றையும் தமிழர் தம் பிரதேசத்தில் பயமின்றி சுதந்திரமாக நடமாடும் உரிமை பெறும் ஒருகாலத்திற்கு ஒத்திவைத்துவிட்டு ஆடம்பரமின்றி அடக்கமாக மாநாட்டை நடத்துங்கள். தமிழ் மக்களுக்கு இன்று வேண்டுவது பணியாரம், வெறும்சிலுசிலுப்பன்று. தலைவர்கள் கவனமெடுப்பார்களா?

**கௌரிமகள்.**

வவனியா.

## "அரசை எதிர்பார்த்து காலத்தைவீணாக்கக்கூடாது!"

### சுழிபுரம் காட்டுப்புலத்தில் யாழ் .எம். பி.

(சுழிபுரம்)

''நான் அரசாங்க அதிபர் பதவி வகித்த காலம் முதல் ஆயிரக்கணக்கான கட்டிடங்களுக்கு அத்திவாரக்கல் நாட்டியுள்ளேன். பல கட்டடங்கள் இன்னமும் முற்றுப்பெறாமல் இருக்கின்றன. சென்றஇரண்டு மாதங்களுக்குள் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் சுழிபுரம் காட்டுப்புலத்தில் சிறுவர் பாடசாலை, மருத்துவ நிலையம் இயங்க ஓர் புதிய கட்டட அத்திவாரக்கல்நாட்டு விழாவிலும், கலந்துகொள்ளச் செய்ததுடன், இன்று திறப்பு விழாவிலும் பங்குபற்றும் வாய்ப்பும் கிடைத்தது. இவ்வளவு விரைவாக இவ்வேலைகளை நிறைவு செய்ய வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் எடுத்த முயற்சிகளை நாம் பாராட்டியே ஆகவேண்டும்''.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்ச அதிபர் திரு. தேவநேசன் நேசையா சுழிபுரம் காட்டுப்புலத்தில் ரூபா ஐம்பதினாயிரம் செலவில் வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகத்தினரால்கட்டப்பட்டபுதிய கட்டடத்தை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

லயன்ஸ் கழகத்தலைவர் திரு. இ. விஜயரத்தினம் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

கட்டிடவேலைகள் யாவும் முற்றுப்பெறாமலேதிறப்புவிழா நடைபெற்றது.

யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில், அரசாங்கத்தின் உதவி இல்லாது இப்படியான ஓர் பெரும்பணியை நிறைவுசெய்த லயன்ஸ் கழகத்தினர் திறமையை நாம் பாராட்டவேண்டும். எமது தேவையை நாம் பூர்த்திசெய்யவேண்டும். நான் பல தேவைகளைச் சுட்டிக்காட்டியும் பயன் ஒன்றும் கிடைக்கவில்லை. அரசாங்கம் உதவும் என்று எதிர்பார்த்துகாலத்தை வீண் போக்காது, எமக்கு வேண்டியவற்றை நாமே பெற வேண்டும்.

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். செந்தில்வடிவேல் பேசுகையில், ''காட்டுப்புல மக்களின் மிகவும் அத்தியாவசியமான தேவைகள், கல்வி, சுகாதாரம் பாதை, பொருள் விற்பனை நிலையம் ஆகியநான்கும் விரைவாக நிறைவு செய்யப்படவுள்ளன. இதற்காக பாடுபடும் பொதுநிறுவனங்களுக்கு எம்மாலான உதவிகள் யாவற்றையும் செய்யக் காத்திருக்கின்றோம்'' என்றார்.

லயன்ஸ் கவர்னர் எஸ்.குணரத்தினம், மாவட்டசபை உறுப்பினர்கள் ச. பூபாலசிங்கம், எஸ். நடேசு, டாக்டர் எஸ். நாகநாதன் ஆகியோர் உட்பட மற்றும் பலர்பேசினர். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. கே. அருணாசலம் நன்றியுரை கூறினார்.

## மருத்துவ மாணவர் சேவை

(மன்னார்)

''மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ பீட மாணவர்களின் சேவை விரைவில் கிடைக்கும். மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் பயிற்சிக் கடமைக்காக 8 வைத்திய மாணவர்கள் வரவுள்ளனர்'' என்று மன்னார் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## பொங்கலை நடாத்த உதவுமாறு இராசுவிடம் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

சாந்தை காளிகோவில்முன்றலிலுள்ள காணியில் இதுவரை காலமும் நடாத்தி வந்த பொங்கல் விழாவை இவ்வருடம் வழமை போல நடாத்த முடியாதவாறு இக்காணியில் தனியார் ஒருவர் வேலி போட்டுத் தடுத்துள்ளதாகவும், இத்தடையை நீக்கி வழமைபோல காளிகோவில் பொங்கல் விழா நடாத்த ஆவன செய்து தருமாறும் இக்கோவில் உரிமையாளர் கொழும்பிலுள்ள பிரதேச அபிவிருத்தி, இந்து கலாச்சார அமைச்சர் திரு செ.இராசதுரைக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலர் திரு எஸ். சுந்தரமூர்த்தியிடமும் இதுபற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கதிரைப்பதிசேர்கந்தா

வேணிப் பிரான்தந் தவித்தக ஞான
விளக்கே விளங்கிழை வள்ளி
நாணிப் புறத்துனை நகரவு மன்பாய்
நாடிநின் ஞண்ட நாதனே
பேணிப் பிரிவிலாப் பேதைதன் இனத்தோர்
பேணுமா பேணநன் குற்ற
மாணிக்கப் பேராற்றரசே கதிரை
மாமணியே யெமக் கருளே

ஆறுபே ராறுநல் அருளார் மாணிக்க
ஆறுமற் றதனின் மூழ்கி
நீறுபேர் நீறு நிமலகன் நீறு
நெற்றிமே லணிந்து நின்சீர்
ஆறுபே ராறும் அருட்திரு முகத்தின்
அலகிலாச் சோதிகண் டுவப்பார்
வேறுபேர் வேரும் விழைவுமற் றகல்வார்
வேந்தே ஆண்மெக் கருளே.

கு. பெரியதம்பி,
தென்புலோலியூர்:

# துணுக்காய் ப. நோ. கூ. ச. ஊழியர்க்கு அலவன்ஸ்!

(துணுக்காய்)

துணுக்காய் பகுதி பலநோக்குச்கூட்டுறவுச்சங்கத்தின் ஊழியர்கள் ஒவ்வொருவரும் 107 ரூபா வாழ்க்கைப்படியை பெற்றனர். 1981ல் அரசின் வரவுசெலவு திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட வாழ்க்கைப் படியே இப்போது இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. துணுக்காய் பகுதி ப. நோ. கூ. ச. பணியாளர் சங்கத்தின் நீண்டநாளாக தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட தன் பயனக தொழிற்சங்க உறுப்பினர்கட்கும் சங்க நெறியாளர்குழு உறுப்பினர்கட்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையின் பயனகவே இவ் வாழ்க்கைப்படி ஒவ்வொரு ஊழியர்களும் சென்றமாதம் தொடக்கம் பெற்று வருகிறார்கள்.

## கயரோக கொடி தினம்

(புலோலி)

இலங்கை கயரோகநிவாரண தேசியசங்கத்தின் கொடிதினம் யாழ். மாவட்டத்தில் அக்டோபர் மாதம் 2ம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இலங்கைகயரோக நிவாரண தேசிய சங்க வடமராட்சிக்கிளையும்' யாழ். கிளையும் இக்கொடி தினத்தை அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

# பொதுநலத் தொண்டர் மயில்வாகனம்

[இன்று 92 வயதை எய்தும் பொதுநலத் தொண்டர் செ. மயில்வாகனம் அவர்களுக்குக் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய முன்றலில் பாராட்டு விழா கொண்டாடப்பெறுகிறது.]

ஈழவள நாட்டின் வடபால் அமைந்த யாழ்நகர் தன்னில் அளவையூர் என்பது பல்கலை நிறைந்த பழம்பெரும் பதியாம் இப்பழம் பெரும் பதி தன்னகத்தே நான்கு பெரு விநாயகர் ஆலயங்களையும், இரு அம்பாள் ஆலயங்களையும், இன்னிசை வல்லுநர்களையும், கலையார்வம்மிக்க செந்தமிழ்ப் பெருங்குடி மக்களையும் கொண்டு விளங்குகின்றது. இப்பதியே பெரியார் மயில்வாகனம் அவர்களின் பிறப்பிடம்.

இவர் சொந்த ஊரான அளவெட்டி மக்களுக்குச் சேவை செய்யும் நோக்குடன் அளவெட்டியில் வசித்துவந்தார். அக்காலத்தில் அளவெட்டி கும்பழாவளை ஆலய நிர்வாகம் தொடர்பாகப் பொதுமக்களுக்கும் ஆலயப் பூசகருக்கும் இடையில் வழக்கொன்று நடந்துகொண்டிருந்தது. பலரின் நன் முயற்சியால் இரு பகுதியினரையும் சமாதானமாக ஓர் உடன்பாட்டிற்கு வர வழிசெய்யப்பட்டது. இவ்வுடன்படிக்கைக்கு அமைவாக தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. மயில்வாகனம் அன்று முதல் இன்றுவரை தொடர்ந்தும் அப்பதவியில் இருந்துவருகின்றார். இவரது தலைமையின் கீழ் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் பலவகையிலும் பொலிவுற்று வளர்ச்சியடைந்து இன்றும் புகழ்பூத்து நிற்கின்றது. இவரின் சேவைக் காலத்தில் தம்ப மண்டபம் புதுப்பித்து அமைக்கப்பட்டது.

தண்ணீர்த் தாங்கி, இராஜ கோபுரம், வெளி மண்டபம், தேர்முட்டி ஆகியன அழகாக அமைக்கப்பட்டும், தேர்க் கொட்டகை, மணிக்கூட்டு மண்டபம், ஆலயக் காரியாலயம் ஆகியனவும், இவற்றை விடப் பிள்ளையார் வீதியென ஒரு வீதி திறக்கப்பட்டும் ஆலயம் மிகப் பொலிவுடன் விளங்குகின்றது. இவரால் ஆரம்பிக்கப்பட்ட தீர்த்தக் குளத் திருப்பணி பொதுமக்களின் உதவியால் மிக விரைவில் அமைந்து விட இருக்கின்றது. இவருடன் முன்பு செயலாளராக உழைத்த காவஞ்சென்ற ஆசிரியர் திரு. இ. முருகேசு அவர்களினதும் நன்முயற்சியால் அமைக்கப்பட்ட கும்பழாவளைத் தொண்டர் சபை தர்மகர்த்தாக்கள் சபையினர்க்குப் பக்க பலமாக நின்று பொதுமக்களின் நன்மதிப்பினைப் பெற்றுச் சிறப்புற்று விளங்குகின்றது.

இவர் பல வருட காலமாக அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் தலைவராகச் செயலாற்றி பல்துறையிலும் அச்சபையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு உழைத்துவந்தார்.

முன்னை நாள் அரசாங்க அதிபரும் சமூகசேவையாளருமான இவரது புதல்வர் ஸ்ரீகாந்தாவும் இவரைப் போலவே பொதுப்பணி விருப்பினர்.

மயில்வாகனம் அவர்கள் அளவெட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தில் கடமையாற்றிய நாட்களில் அரச உதவியுடனும் பொதுமக்களின் உதவியுடனும் அக்கட்டிடத்திற்கு அழகிய முகப்பினை அமைத்துத் தந்தார். அம்மண்டபத்தில் பக்கங்கட்கு யன்னல் கதவுகளை அமைத்துத் தனது கிராமத்து இளம் பெண்கள் நலம்பெற ஓர் நெசவுசாலையையும் நிறுவினர். இன்று அது வளர்ச்சியுற்று அரும் பெரும் சேவையாற்றி வருகின்றது. அரசாங்கத்தின் சிபார்சினல் நிறுவப்பட்ட சமாதான சபையின் தலைவராகக்கடமைபுரிந்து அக்காலத்தில் அரிய பல சேவைகள் செய்து மக்களின் பெருமதிப்பினைப் பெற்றார்.

அளவெட்டியில் பல்வேறு இசைவல்லுநர்கள் இருந்தபோது அக்கலைஞர்களை ஊக்குவிக்க எண்ணும் நோக்குடன் அளவை இசைக்கலை மன்றத்தை அமைத்து அதன் தலைவராகக் கடமையாற்றி பல இசை விழாக்களை நடாத்தி மக்களுடன் சேர்ந்து தானும் மகிழ்ந்து கலைவாணிக்கு அளப்பரிய கடமையாற்றினர். அரசு கையேற்கும்வரை அளவெட்டி அருணேதயக் கல்லூரியின் முகாமையாளராகவும், இராமநாதன் கல்லூரியின் உரிமையாளர் சு. நடேசபிள்ளை அவர்களது பொருட்களுக்கும், அக் கல்லூரிக்கும் பாதுகாவலனகவும் பணிபுரிந்தார். இப்படியாக இவர் ஆற்றிய அரும் பெரும் சேவைகளை நன்குணர்ந்த அரசு அவரைப் பாராட்டி சமாதான நீதிபதிப் பட்டம் கொடுத்துக் கௌரவித்தது. அளவையூர் வாசிகளுக்கு அவ்வப்போது ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைப் போக்குவதற்கு அன்னர் எடுத்த அரு முயற்சிகளை விபரிக்க முற்படின் கட்டுரை விரியுமென அஞ்சி விடுகின்றோம்.

இப்படியாக அரும் குணக் குன்றாய் ஆசார சீலராய் சமய நெறி தவருச் சான்றோனாய் அன்புள்ளம் கொண்ட இவ்வருந் தமிழ்ப் பெருமகனர் ஆயுள் பல கொண்டு நூற்றாண்டு காலம் வாழ்ந்து பெரும் புகழ் எய்த எல்லாம் வல்ல கும்பழாவளை விநாயகர் பேரருள் புரிவாராக.

**மு. திருநாவுக்கரசு,**

## விவசாயிகள் பாதிப்பு

(துணுக்காய்)

துணுக்காய், பாண்டியன் குளம், வவுனிக்குளம், தென்னியன்குளம்ஆகியபகுதிகள்தற்போது சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதால் நெற்பயிர்களைத் தாக்கும் கிருமிகளில் கொடியநோய் இப்பகுதி வயல்களைக் கொடூரமாகதாக்கி சேதம் விளைவித்துவருகின்றன. வயல்களில் நீர் தேங்கிநிற்கும் போது இந்த கொடியநோய் கிருமிகள் நெல்லின் அடிப் பகுதியை தாக்கியேபெருமளவு வயல்களையும் தாக்கியுள்ளது. இந்நோய் சகல வயல்களையும் தொற்றுநோய்போல் தாக்கும் அறிகுறி இருப்பதாகவும் இப் பகுதி விவசாயிகள் கவலை கொண்டுள்ளனர்,

இதனல் இப்பகுதி விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். விவசாய இலாகா தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## "புதிய சமுதாயத்தை விளையாட்டுத்துறை உருவாக்குகிறது"

(மட்டுவில்)

"நமது மத்தியிலே மதிநுட்பமும், சுறுசுறுப்பும் கொண்ட ஒரு புதிய சமுதாயத்தை விளையாட்டுத்துறை உருவாக்குகிறது. கட்டுப்பாடு, தலைமைக்குப் பணிதல் வெற்றி தோல்வியை சமமாகஎடைபோடல் போன்ற உயர்ந்த பண்புகளையும் எமது இளைய தலைமுறைகளுக்கு விளையாட்டுத்துறையே உருவாக்குகிறது."

இவ்வாறு மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய வட்டாரக் கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு எஸ். கந்தையா தலைமையில் இந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

## புங்குடுதீவில் தன்னியக்க தொலைபேசி நிலையம்

(இருப்பிட்டி)

புங்குடுதீவில் தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துக்கான கட்டிட வேலைகள் முடிவடைந்துள்ளன. மகாவித்தியாலயத்துக்கருகில் அமைந்துள்ள இக்கட்டிடம் ஒன்றரை இலட்சம் ரூபாவில் அமைக்கப்பட்டது.

# "தமிழர் பொருளாதாரத்தில் கூட்டுறவுத்துறை பெரும்பங்கு"

**— வி. பொன்னம்பலம்**

(சுழிபுரம்)

"தமிழ் பேசும் மக்களின் பொருளாதார வளத்தில் கூட்டுறவுத்துறை மிகப் பெரும் பங்கு வகிக்கிறது. சிறுகச் சிறுக சேமிக்கப்பட்ட சேமிப்பு பணம் பெரும் தொகையாக வளர்ந்து பல நல்ல காரியங்களைச் செய்ய முடிகின்றன வட பகுதியில் செயல்படும் ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜம் பல நல்ல பணிகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளன. இத்திட்டங்கள் யாவும் மேற்கொள்ளப்பட்டால் நமது தேவைகள் பல நிறைவு பெறும் இதற்கு ஐக்கிய நாணய சங்கங்கள் யாவும் பக்கபலமாக உழைக்கவேண்டும்."

இவ்வாறு பண்ணுகம் மக்கள் ஐக்கிய நாணய சங்கம் நடாத்திய கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய திரு. வி. பொன்னம்பலம் குறிப்பிட்டார். பண்ணுகம்தெற்குஐக்கிய நாணய சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. செ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் பேசுகையில் "ஐக்கிய நாணய சங்க இயக்கம் தனியொருவருக்காக இல்லாமல் யாவருக்கும் உதவும் இயக்கமாக வளர்ச்சியடைய வேண்டும். பல நல்ல காரியங்களைச் செய்ய வாய்ப்பு ஏற்படுவதுடன் சிறு தொகையுடன் பெருந் தொகையான பணத்தை பெறவும் வாய்ப்பாக வுள்ளது." என்றார்.

திரு. பொ. இரத்தினசபாபதி, என். எஸ். மூர்த்தி உட்பட மற்றும் பலர் பேசினர். புதிய தனதிகாரியாக திரு. க. வாமதேவன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். திரு. க. வேலாயுதர் நன்றியுரை கூறினர்.

# "நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்"

## ஆசிரியர் பெற்றேருக்கு அறிவுரை

(சுண்டிக்குளி)

"மாணவர்கள் நம் கைகளில் கொடுக்கப்பட்ட நம்பிக்கைச் செல்வங்கள் அச் செல்வங்களை உருவாக்கி நல்ல சமுதாயமாக்க வேண்டியது எம்கடமை, ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்"

இவ்வாறு வடமாநிலக் கல்வியதிபதி திரு. எம். சிமியாம் பிள்ளை, யாழ். திருக்குடும்பக் கன்னியார் மட பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

யாழ். ஆயர் அதி. வந். பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், திரு. சிமியாம்பிள்ளை கூறியதாவது.

"யாழ். வட்டாரத்தில் முதன்மை வசிக்கும் பெண்கள் பாடசாலை பரிசளிப்பு விழாவில் பங்குபற்றுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன் இப் பாடசாலை விஞ்ஞானம், சலை, வர்த்தகம், கீழைத்தேசமேலைத் தேச சங்கீதம் போன்ற சகல துறைகளிலும் காணப்படும் முன்னேற்றத்தை பாராட்ட வேண்டும். இன்று விஞ்ஞானக் கல்வியே கல்வி உலகில் முக்கியம் வகிக்கிறது. 1862ம் ஆண்டு மிசனரி மார்களினல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, அவர்கள்விட்டுச்சென்ற பாதையிலேயே செல்கிறது. என்பதையாரும் மறுக்கமுடியாது. அதனல்தான் இப்பாடசாலை சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைகிறது. எனது மனைவிகூட இங்கு கல்வி பயின்றது பெருமைக்குரிய விடயம் என்றார்.

புதிதாக நடைமுறைப்படுத்தும் கொத்தணி பாடசாலை முறைகளைப் பற்றியும் விளக்கினர்.

பாடசாலை அதிபர் சங். சகோதரி எம். அன்ரனி யோசப் அறிக்கைவாசித்துஉரையாற்றுகையில் "எமது வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் மன்னர், வவனியா பகுதிகளில் கல்வியதிகாரியாக இருக்கும்போது விஞ்ஞானக்கல்வி வளர்ச்சிக்கு உயர்தர, விஞ்ஞான வசதிகளை ஏற்படுத்தியது பாராட்டக்குரியது. என்றார்.

திருமதி. ஜெயமணி சிமியாம்பிள்ளை பரிசில்கள் வழங்கினர்.



## இதுவரை காலமும் இருந்த முறையில் காணிக்கச்சேரியை நடாத்த வவனியா எம். பி. கோரிக்கை

(வவனியா)

வவனியா-பாவற்குளம் நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் படிவம் மூன்றில் கொடுபடவிருக்கும் மூன்று ஏக்கர் கொண்ட 129 காணித்துண்டுகளும் உரிய முறையில் இதுவரை காலமும் கடைப்பிடித்துவந்த முறை கையாளப்பட்டுகாணிக்கச்சேரி வைக்கப்பட்டு, காணிகள் விநியோகம் நடைபெறவேண்டுமென வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் காணி ஆணையாளரை கடிதம் மூலம் வேண்டியுள்ளார்.

எம். பி. திரு. சிவசிதம்பரம் காணி ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:

செட்டிகுளம் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள புளியாலங்குளம் கிராமசேவையாளர் பிரிவிலுள்ள 129 காணித்துண்டுகளும் காணிக்கச்சேரி மூலம் கொடுபடவிருக்கின்றது என்பதனை அறிகின்றேன். விண்ணப்பங்கள் வவனியாதெற்கு சிங்களப் பிரிவு உதவி அரச அதிபர் பகுதியிலிருந்தும் கோரப்பட்டிருப்பதாகவும் அறிகின்றேன்.

குறித்த காணி விநியோகம் குடியேற்றத்தின் திட்டம் உருவாக்கப்படுவதற்கல்ல. இந்த நாட்டின் காணி விநியோக முறைப்படி எந்த உதவி அரச அதிபர் பிரிவில் காணி இருக்கின்றதோ முதலிடம் அந்தப் பிரிவிலுள்ள காணியற்ற ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கப்படவேண்டும்.

தகுதி இல்லாதவர்கள் இல்லாவிடத்து அயலிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளவர்களுக்கு காணி விநியோகம் செய்வதை நான் ஆட்சேபிக்கவில்லை.

# தமிழீழம்பெற்றுத்தருவோம்’ என்றுநாம்கூறியதுகிடையாது

## கைதடியில் சாவகச்சேரி எம். பி.

(சாவகச்சேரி)

''1977ம் ஆண்டு தமிழக் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தல் நடத்தப்பட்டதே ஒழிய ‘எங்களைப் பாராளுமன்றம் அனுப்புங்கள் நாங்கள் தமிழ் ஈழம் பெற்றுத்தருவோம்’ என்று எந்தவொரு தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களும் உறுதி கூறியது கிடையாது. பாராளுமன்றத்தை தமிழீழ இலட்சியத்திற்கும் தமிழீழப் போராட்டத்துக்கும் ஒரு பிரச்சார மேடையாகப் பாவிப்போம். தமிழீழ லட்சியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு எமது இயக்கம் தொடர்ந்து போராடும் என்பது தான் அன்று நாம் முன்வைத்த வேலைத்திட்டமாகும்.''

இவ்வாறு சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம், கைதடி மத்தி உதயசூரியன் சன சமூக நிலையத் திறப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகப்பங்கு கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

விசேடசேவை அலுவலர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவின்போது அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தாவது:

''நாம் 77ல் முன்வைத்த வேலைத்திட்டத்தை எம்மால் இயன்றவரை நிறைவேற்றியிருக்கிறோம். எமது இயக்கத் தலைவர்கள் எவரும் - தமிழீழ லட்சியத்திற்கு எதிராக எக்கட்டத்திலும் செயல்பட்டதில்லை. இனத்திற்கு அவ்வப்போது ஏற்பட்ட கஷ்டங்களையும் பிரச்னைகளையும் தீர்ப்பதற்காக தற்காலிக தீர்வுக்கான சில பேச்சுவார்த்தைகளை அரசுடன் நடாத்தியது உண்மை தான்.''

''தமிழ்ப் பேசும் மக்கள் 77ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்த அத்தனை பேரும் தமிழ் ஈழ இலட்சியத்துக்கு மட்டும் வாக்களித்தார்கள் என்று நாம் கூறமுடியாது.''

''இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் விடுதலை விரும்பிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து மீண்டும் ஒரு கொடியின் கீழ் வரவேண்டும். எமது தமிழீழ இலட்சியத்தை திட்டமிட்ட முறையிலே முன்னெடுத்துச் செல்லவேண்டும்.''

மற்றும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா, பிரதேச அபிவிருத்திச்சபைத்தலைவர் திரு. கே. வி. முத்துக்குமாரசாமி அறவழிப் போராட்டக்குழுவைச்சேர்ந்த திரு. வீ. எஸ். துரைராசா உட்பட இன்னும் பலர் பேசினர்.

## “ஆசிரியர் பற்றுக்குறையை நீக்க நெடுந்தீவுப் பாடசாலைகளை ஒன்றிணைக்கவேண்டும்!”

(நெடுந்தீவு)

''நெடுந்தீவுப் பாடசாலைகளை ஒன்றிணைப்பதால் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்கலாம். இதன் மூலம் பிள்ளைகளின் தொகையையும் கல்வித் தரத்தையும் உயர்த்தலாம்''.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் திரு. வே. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற மாதாந்த பிரதேசசபைக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருகோணமலை வன்செயல்களை உடன் நிறுத்துவதற்கும், தமிழ் மக்களுக்கு போதியபாதுகாப்பு அளிப்பதற்கும் - பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கும் அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் பிரதேசசபைச்செயலாளரும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபருமான திரு. ஆ. மகாலிங்கம் சென்றகூட்ட அறிக்கை சமர்ப்பணத்தோடு ஆரம்பமானது.

நெடுந்தீவுக்கென அனுப்பப்பட்ட அம்புலன்ஸ் மோட்டார் படகைத் திருத்தி மீண்டும் சேவைக்கு விடுமாறு உரிய அதிகாரிகளை வேண்டிக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## வடிசாராயம் வைத்திருந்த பெண்களுக்கு அபராதம்!

(சுண்டிக்குளி)

குருநகரைச் சேர்ந்த ராசமலர் யூலியட் என்ற பெண் தமது வீட்டில் சுமார் ஆறு போத்தல்கள் வடிசாராயம் வைத்திருந்து, விற்பனைசெய்த போது யாழ். காலால் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. வீ. சீ.வீ. பிரான்சிஸ் தலைமையிலான கோஷ்டியினரால் பிடிக்கப்பட்டார்.

சந்தேகநபரான பெண்ணை, யாழ். நீதிபதி திரு. எஸ். நாகராசா முன்பு ஆஜர் செய்த போது, நீதிபதி ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினுர்.

திட்டியைச் சேர்ந்த சவரியான் விசிறித்தம்மா என்ற பெண் வீட்டில் வடிசாராயம் வைத்திருந்ததாக யாழ். காலால் பகுதியினரால் யாழ். நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில், குற்றவாளியாகக்கண்ட யாழ். நீதிபதி ஐநூறு ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினுர்.

## வர்த்தமானிஇன்றி மக்கள் பாதிப்பு

(கரவெட்டி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் நெல்லியடி உப அலுவலகத்தின் பொதுநூல் நிலையத்தில் நீண்ட காலமாக அரச வர்த்தமானி வைக்கப்படாமையினுல் இந்நூலகத்தைச் சார்ந்த நெல்லியடி, வதிரி, துன்னலை, கரவெட்டி நவிண்டில் பகுதி மக்கள் பெழுதும் பாதிக்கப்படுகின்றனர்.

## ரூ. 60,000 கடத்தல் பொருட்கள் சிக்கியது

(சுண்டிக்குளி)

வல்வெட்டித்துறை கடற்கரையில் இருந்த வள்ளம் ஒன்றில் இருந்து அறுபது ஆயிரம் ரூபா பெறுமதியான ஆறு கட்டுக்கள் இந்திய சாரிகள் இறக்கும்போது, இராணுவத்தினர் மடக்கிப் பிடித்தனர். இறக்கிக்கொண்டிருந்தவர்கள் இராணுவத்தினரைக் கண்டதும் ஓடியபோது ஒருவரை இராணுவத்தினர் பிடித்தனர்.

பிடிக்கப்பட்ட பொருட்களையும், சந்தேக நபரையும் யாழ். சுங்கப்பகுதியில் ஒப்படைத்தனர். யாழ். சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். எம். ஜே. சேனரத்தின பொருட்களைப் பறிமுதல் செய்து சந்தேக நபருக்கு இரண்டாயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

## கைப்பணிக் கண்காட்சி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் உப-வட்டார பாடசாலைகளுக்கான கைப்பணிப் பொருட்கள் கண்காட்சி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி, மனையியல் பாடங்கள் சம்பந்தமாக இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கண்காட்சியை முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் திறந்து வைத்தார்.

மாங்குளம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தமும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார். இதற்கான ஏற்பாடுகளை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் திரு. ஆ. தா. ஆறுமுகமும் பாடசாலை ஆசிரியர்களும், ஆசிரியைகளும் மேற்கொண்டிருந்தனர்.

## எரிபொருள் தட்டுப்பாடு: விவசாயிகள் பாதிப்பு

(ஒட்டுசுட்டான்)

எரிபொருள் தட்டுப்பாட்டால் முத்துஐயன்கட்டுக்குளம் படித்த வாலிபர் திட்ட விவசாயிகளும், உழவர் திட்ட விவசாயிகளும் நீர் இறைக்கும் இயந்திரங்களை இயக்கமுடியாமல் இருப்பதுடன் தங்களின் உப உணவு பயிர்களான மிளகாய், வெங்காயம் போன்றன பெரும் சேதம் ஏற்பட்டு தங்களின் வருவாயை நட்டப்படுத்தி விடும் என அஞ்சுகின்றனர்.

இதுபற்றி தங்களின் குடியேற்ற அதிகாரிகளிடம் ஏற்ற நடவடிக்கை எடுக்கும் படி மகஜர் சமர்ப்பித்துள்ளனர். முல்லைத்தீவு அரசாங்க அதிபரையும் பாராளுமன்ற உறுப்பினரையும் ஏற்ற நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுள்ளனர்.


SINGER

நகர கிராம மக்களை மகிழ்விக்கும் மற்று மொரு

சிங்கர் சாதனம்

12”, 17” கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி



மிகத் தெளிவாகவும் கவர்ச்சிகரமாகவும் காட்சி தரும் 12, 17' கறுப்பு வெள்ளை தொலைகாட்சிப் பெட்டி இன்று எல்லோரினதும் மனதைக் கவர்ந்துள்ளது. நீங்களும் இன்றே 12" 17'' கறுப்பு சிங்கர் தொலைகாடசி பெட்டி ஒன்றை வாங்கி அதன் இன்பத்தை அனுபவியுங்கள்.
பெற்றரியிலும் மின்சாரத்திலும் இயங்கக் கூடியது மொத்த விலைக்கும் தவணைக்கட்டண முறையிலும் கிடைக்கக்கூடியது.
உடனே நாடுங்கள் உங்கள் சிங்கர் வியாபாரிகளை.
விற்பனைக்கு பின்பு சிறந் சேவையும் உண்டு.

12" - ரூ. 2640/00 விலை சேர்துத்துக் கொள்ளவும்.
17" பிரசவிளாவில் கிடைக்கும்

* Registered Trade Mark of the SINGER Company

சாந்தி யாழ்.
தினசரி 3 காட்சிகள்
கடைசி வாரம்
தியாகம்
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-40
என். டி. ராமராவ்
அஞ்சலிதேவி
பாலநாகம்மா

28-7-83 வரை மட்டும்
மனோகரா (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-ஸ்ரீதேவி
வாழ்வே மாயம்
(ஈஸ்மன்கலர்)

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-30
(யாழ்ப்பாணம்)
ரஜனிகாந்த்— காளி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-30, 9-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
மன்னவன்
வந்தானடி

ராணி தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த 9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
வாயாடி
விரைவில் வருகிறது
சிவகுமார்-ராதா நடித்த ஆனந்த ராகம்

றீகல்-Regal தினசரி 10-30, 2-00, 4-30
7-15 P. M.




இன்னும்
9 தினங்கள் மட்டும்
கபீர்பேடி....
சனும் சூரி...
நடிக்கும்
"கேர்ல்
(f)ப்ரம்
இந்தியா"
GIRL
FROM
INDIA
TECHNICOLOR
இனிய நான்கு
ஹிந்திப் பாடல்கள்
உங்களை
மெய்மறக்கச் செய்யும்
வயது வந்தவர்கள்
மட்டும்

# இன்றைய பலன்

ஆனி 32ம் திகதி

சனிக்கிழமை

(16—7—83)

மேடம்: கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள் மற்றவர்களின் ஏளனப் பார்வைக்கு இலக்காகாமல் பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் யாக்கிரதையாக இருக்கவும்.

இடபம்: தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும் சிலருக்கு ஆத்மீக விடயத்தில் ஆர்வம் பிறக்கும் பொதுப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொது மக்களின் ஆதரவும் பிதாவழிச் சுகமும் உண்டு.

மிதுனம்: இதமான வாழ்வும் இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும் செய் தொழிலிலும் சிறப்பு உண்டு மேலதிகாரிகளும் உதவிக்கு முன்வருவார்.

கடகம்: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கலை தாக்கும் கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்பாலுணர்ச்சி மேலிடும் மேலிடத்து ஆதரவு தப்பாமல்கிடைக்கும்.

சிங்கம்: மனக்கவலை உருவாகும் கடமையில் தடை ஏற்படும் மதுபானத்தைத் தவிர்க்கவு பாதையில் பழுதுண்டு பகைவர்கள் காத்திருப்பார்கள் செலவினங்கள் அளவுக்கு மிஞ்சி இருக்கும்.

கன்னி: நிச்சயமற்ற நிலையில் வேதனைப்படுவீர்கள் எதிர் பார்த்த பொருள்வரவு இன்று தடைப்படலாம் சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும்.

துலாம்: கைநிறையப் பணம் காதல் செய்யத் துணை வாழ்க்கையே கலகலப்பாக இருக்கும் இனிக்கப் பேசுபவர்கள் மூலம் வேண்டியவர்களைச் சொக்க வைப்பீர் சுவையானதினம்.

விருச்சிகம்: நெஞ்சமும் புண்ணாகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும் தொழிலாலே தொல்லை தோன்றும் அடிசறுக்கும் நிகழ்ச்சி இடம்பெறும் ஆணவத்தை அடக்கின் நன்மை உண்டு.

தனு: கன்னல்மொழி பேசி காரியத்தைச் சாதிப்பீர்கள் கவர்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும் வெளியூர் நண்பர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும் வாகன விருத்தி உண்டு.

மகரம்: கோஷ்டிச் சண்டையில் உங்களையும் மாட்டி விடுவதற்கு சிலர் முனையக்கூடும் கொடுக்கல் வாங்கல் மூலம் பகை உருவாகும் மேலதிகாரிகளின் கோபத்துக்கு இலக்காகுவீர்.

கும்பம்: கைகொடுத்துஉதவுவதற்கு தந்தை முன்வருவார் காரியசித்தியும் கிட்டும் நீண்ட நாள் எதிரிகள் இன்று நண்பர்களாக மாறுவார்கள் திருப்தியான தினம்.

மீனம்: முதல்விட்டுச் செய்யும் தொழிலில் இலாபம்உண்டு வணிகத்துறையில் துரித முன்னேற்றம் கிடைக்கும் பிள்ளை ஒன்றின் கல்வி உயர்வு மகிழ்ச்சியைத் தேடித்தரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த



அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்
(இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்)

# "கைதடிக் கட்டடத்தில் காக்கைகளும், வௌவால்களும்!"

## ஆயுள்வேதக்கல்லூரி பற்றி கவலை

(மட்டுவில்)

''ஆயுள்வேதக் கல்லூரிக்கென கைதடியில் அரசாங்கம் சகல வசதிகளுடன் கூடிய ஒரு நிரந்தர கட்டிடத்தை அமைத்துள்ளது. இக்கட்டிடம் எதுவித பாவனையுமின்றி பாழடைகிறது. காக்கைகளும், வௌவாலும் குடியிருக்கிறது. இந்த நிலையில் வடஇலங்கை ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்கள் கல்விபோதனையின்றி, போதனைக்கான பாடசாலைக் கட்டிடமின்றி அவலப்படலாமா? இவ்வாறு வடஇலங்கை ஆயுள் வேதக் கல்லூரி மாணவர் தலைவன் திரு, கா. நடராஜா கவலை தெரிவித்துப் பேசினார்.

கைதடி அரசினர் ஆயுள் வேத வைத்தியசாலை வைத்திய அதிபர் டாக்டர் ஜீ. பி. ஜீ. பியதாச தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே திரு.நடராஜா யாழ். வடஇலங்கை ஆயுள் வேத கல்லூரி மாணவர் சார்பில் இப்படிக் கவலை தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் டாக்டர் காசிநாதர், திரு. வ. வேலுப்பிள்ளை வர்த்தகப் பிரமுகர் திரு. கே. வி. முத்துலிங்கம் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## இன்று ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் பதினொராவது ஆண்டு விழா இன்று சனிக்கிழமை நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக டாக்டர் சு. ஸ்ரீ விக்னேஸ்வரா கலந்து கொள்வார்.

இவ்விழாவையொட்டி மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் மெய்வல்லுநர் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

## நடப்புவருட நிர்வாகிகள்

(கோண்டாவில்)

கொக்குவில் மேற்கு காந்திஜி சனசமூக நிலைய நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: த. அந்தோனிப்பிள்ளை, செ. ஸ்ரீவிஜயம் தலைவர் இ. மோகன், உப-தலைவர்: எஸ். சாந்தலிங்கம், செயலாளர்: இ. நடராசா, உப-செயலாளர்: அ. செல்வக்குமார், பொருளாளர்: சு. பாக்கியராஜா, ஐ. அப்புக்குட்டி, விளையாட்டுத் தலைவர்: த. சத்துருகுலசிங்கம், கி. செல்வராசா, நிலையப் பொறுப்பாளர்: வ. சண்முகலிங்கம், கணக்குப் பரிசோதகர்: இ. ஜெயச்சந்திரன் மற்றும் நான்குபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## வெளிநாடு...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர் தஞ்சை மாவட்டம் திருவாரூரைச் சேர்ந்தவர். வெளிநாடுகளில் வேலை கிடைக்கும் என்று நம்பி பணத்தை கொடுத்து மோசடிக்கு ஆளானவர்கள் தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ளனர்.

ஜெயபாலனின் கூட்டாளிகள் என்று கூறப்படும் மேலும் மூவரை பொலிசார் தேடி வருகிறார்கள்.

வெளியே வந்தவை நாலூறு புகார்கள் என்றாலும் இதற்கு மேலும் பலர் இந்த மோசடிக்கு ஆளாக்கப்பட்டு ஏமாற்றப்பட்டிருக்கலாம் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

## தமிழீழ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் மக்கள் பரம்பரையாக வாழும் பகுதிகளிலிருந்து ராணுவத்தை இலங்கை அரசு திரும்பப் பெறவேண்டும் இந்தியாவில் இருக்கும் ஈழவிடுதலை போர் வீரர்களை வெளியேற்றுவதை இந்திய அரசு நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கைகளை தமிழ் மக்கள் வற்புறுத்த வேண்டும் என்றும் அந்த இயக்கங்கள் கோரியுள்ளன.

## நினைவுக்குறிப்புக்கள்:

## கவிஞர்

## வண்ணைத்தியாகன்!



'ஓ...ஷீலா... பாடல் மூலம் புகழ்பெற்ற கவிஞர் வண்ணைத்தியாகன்' மறைந்தும் ஒருமாத காலம் ஓடிவிட்டது. அவருக்கு புகழைத் தேடித்தந்த பாடல்களாக 'மிஸ்சா.. மிஸிஸ்சா தெரியல்லே..' 'அடுத்த வீட்டுக் கல்யாணிக்குக் கல்யாணம்' போன்ற துள்ளிசைப் பாடல்களைக் குறிப்பிடலாம். துள்ளிசைப்பாடல்கள் என்றில்லாமல் மெல்லிசைப் பக்திப்பாடல்களையும்யாழ்-குடாநாட்டுமேடைப் பாடகர்கள் கேட்ட போதெல்லாம் இயற்றிக்கொடுப்பதுடன் ஒதுங்கி வாழ்ந்தவர் இவர்.

ஆத்ம திருப்திக்காகப் பாடல்களை இயற்றிவந்த கவிஞர் 'வண்ணைத்தியாகனின்' இயற்பெயர் மு.தியாகராசா என்பதாகும்.

1933ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ந் திகதி வண்ணார்பண்ணையில் பிறந்த கவிஞர் 'வண்ணைத்தியாகன்' பாடல்கள் மட்டுமென்றில்லாமல் கதைகள், நாடகங்கள், வில்லிசை, நாட்டிய நாடகப் பிரதிகள் எழுதுவதுடன் பங்கேற்று நடித்தல் நெறிப்படுத்தல், ஒப்பனை செய்தல் போன்ற கலைத்துறை சம்பந்தப்பட்ட பல துறைகளிலும் தமதுபங்களிப்பைச்சிறப்பாகச் செய்துள்ளார்.

யாழ். நாச்சிமார் கோவிலடி இராஜன் வில்லிசைக் குழுவை உருவாக்கி வளர்த்து வந்தார். நாச்சிமார் கோவிலடி சுடரொளி சனசமூக நிலையம் முன்னேற்றக்கழக நிர்வாகசபை உறுப்பினராகவும், வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்க உப செயலாளராகவும் சேவையாற்றியமை மறக்க முடியாதவைகள்ஒப்பனைகலைஞராகவும், கவிஞராகவும், நாடகாசிரியனாகவும், நடிகனாகவும், சமூகசேவையாளனாகவும் விளங்கிய கவிஞர் 'வண்ணைத்தியாகனி'ன் இழப்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும், மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்றே!

'பட்டனோர்து'

## தமிழ் இளைஞர்களுக்கு
# ஆங்கில போதனை
## யாழ். லயன்ஸ் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர்கள் விரைவில் ஆங்கில அறிவை விருத்தி செய்துகொள்ளும் விதத்தில் ஆங்கில வகுப்புக்களை நடத்த யாழ். லயன்ஸ் கழகம் தீர்மானித்துள்ளது.

ஆங்கில அறிவு தேவைப்படும் தொழில்களில் ஈடுபடவும் வெளிநாடுகளில் தொழில் பெறவும் உதவும் வகையில் தமிழ் இளைஞர்களுக்கு ஆங்கிலக்கல்வி போதிக்கப்படவிருக்கிறது.

இந்த வகுப்புக்களில் சேர்ந்துகொள்ளவிரும்பும் இளைஞர்கள் லயன்எஸ்.அற்புதானந்தா கொமர்ஷல் பிரின்டர்ஸ் அன்ட்ரேட், பிரதான வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகின்றது.

## வட்டுக்கோட்டை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

4 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

சுமார் 4-5பேர் கிறிஸ் கத்திகளுடன் தபால் அலுவலகத்துள் சென்று அங்கிருந்த ஊழியர்களைப் பயமுறுத்தித்தொலைபேசியைக் கீழே போட்டு நொருக்கினராம். பின்னர் பென்ஷன்காரர்களுக்கு வழங்கவேண்டிய மீதிப்பணமான சுமார் 800 ரூபாவை எடுத்துச் சென்றனராம். அவர்கள் போகும் பொழுது அலுவலக ஜன்னல் கண்ணாடியையும் உடைத்துவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

## அல்வாய் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் தொலைபேசியை அடித்து நொருக்கினாராம்.

மற்றவர் உப தபாலதிபரின் முதுகில் கத்தியை வைத்தபடி பணப்பெட்டியைத் திறக்கச் செய்து சுமார் 2000 ரூபா பணத்தையும், முத்திரைகளையும் கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. (ப)

# இப்படியும் நடக்கிறது

"பயங்கரவாதத்தினால் எதனையும் சாதித்துவிட முடியாது. பயங்கரவாதம் எந்த நாட்டில் தலைதூக்கினாலும் அது கண்டிக்கப்படவேண்டும். நாடு பிளவுபடுவதால்.-பிரிவினையால், பலன் எதுவுமே ஏற்படாது. எமது நாட்டிலும் பிரிவினையை வன்மையாக எதிர்க்கின்றோம்."

எந்த நாட்டு அரசியல்வாதி அல்லது தலைவர்இப்படிக் கூறியிருக்கிறார் என்று மண்டையைப் போட்டு உடைக்காதீர்கள்.

அரசவிருந்தாளியாக வந்திருக்கும்போது எம். எல். வசந்தகுமாரிதான், தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

காதோடு காதாக: யாழ்ப்பாணத்திலும் திருமதி எம். எல். வசந்தகுமாரி இசைமாரி பொழிய இருந்தவர். திடீரென இந்த ஏற்பாடு ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

"ஊடுருவி"

## நடராசா திடீர் ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

"தமிழ்மக்களின்அபிலாஷைகள் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஜனாதிபதியுடன் 3முறை சந்தித்து நான்பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போது குறைந்தபட்சமாக மாவட்ட அடிப்படையிலாவது பூரண அதிகாரம் வழங்கவேண்டும் எனக்கேட்டிருந்தேன். இந்த வாரம் வந்த ஒரு செய்தி எங்களை அலட்சியப்படுத்தியது போலிருக்கிறது. இந்தநிலையில் தான் இச்சபையில் இருந்து விலக தீர்மானித்துவிட்டேன். இன்றுதான் இறுதியாக இந்த ஆசனத்தில் இருக்கப்போகின்றேன்.

"கடந்த 2 வருடங்களாக யாழ். அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்கள் திட்டமிடல் பணிப்பாளர் தந்த ஒத்துழைப்புக்கு நன்றி கூறுகிறேன்.

மானிப்பாய் எம். பி: தங்கள் ராஜினுமா மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஜனாதிபதிக்கு நீண்ட கடிதம் எழுதியிருக்கிறீர்கள். தமிழ் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி காப்பாற்றப்படவில்லை என்பதுதான் தங்கள் கவலை. தந்தை செல்வாவின் பிரதம சிறந்த சிஷ்யராக இருந்திருக்கிறீர்கள். பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறிந்த போதுகூட அவர் பதவியை விட்டு விலகவில்லை. தந்தை செல்வாவிலும் பார்க் நீங்கள் துணிச்சல்மிக்கவர்கள். நீங்கள் பதவியை விட்டு போவதால் மாவட்டசபை ஒரு சிறந்த நிர்வாகத்தை இழப்பதாக உள்ளது. நிறைவேற்றுக் குழுவுக்கும் தேர்தல்ஆணையாளருக்கும், கூட்டணிக்கும், அறிவிக்காமல் இந்த முடிவுக்கு வந்திருக்கிறீர்கள். தயவு செய்து உங்கள் முடிவை மறுபரிசீலனைசெய்யுங்கள்"

நல்லூர் எம். பி: எக்காரணத்திற்காக நீங்கள்ராஜினுமா செய்யவேண்டும்? ஜே. ஆர். அனுமதியுடனே, அவரைத் திருப்திப்படுத்தவோ, தாங்கள் மாவட்டசபை தலைவராக வரவில்லை. கூட்டணிக்காகத்தான் தலைவராக வந்தீர்கள். நாங்கள் முடிவு எடுத்தபோது, கூட்டணி உயர்மட்டக் குழுவுடன் முடிவு எடுத்துக்கொண்டிருக்க வேண்டும், தமிழினமும் கூட்டணியும் இன்று ஒரு சிக்கலான நிலையில்இருக்கிறது இக்காலகட்டத்தில் எடுக்கப்பட்ட இம் முடிவு அதிர்ச்சியாக உள்ளது. தயவு செய்து மறுபரிசீலனைசெய்து கட்சியரசியலுக்கு முன்மாதிரி காட்டவேண்டும்.நாங்கள் எல்லோருமே பதவிகளைராஜினுமா செய்யவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். மாவட்டசபை பலவீனமாக இருந்தால், நாங்கள் எல்லோருமே ராஜினுமா செய்யவேண்டும். சிக்கலான சூழ்நிலை இருப்பதால், இது பற்றி சிந்திக்கவேண்டும்."

கோப்பாய் எம். பி: பல ஆண்டுகாலமாக இயக்கத்தில் உழைத்து அனுபவம்பெற்றிருக்கிறீர்கள். நாங்கள் ஒவ்வொருவரும், இப்படிப் பதவிகளை விட்டு ஓடினால், தமிழ் மக்கள் யாரிடம் சென்றுதங்கள் இன்னல்களை முறையிடுவார்கள்? ராஜினுமா முடிவை கைவிடுங்கள்."

"தலைவர் சு. நடராசா: "கடந்த சனிக்கிழமை நடந்த பொதுச்சபைக் கூட்டத்தில் முதிய உறுப்பினர் என்ற ரீதியில் எனக்கு பொதுச்சபையினர் மதிப்பளிக்காததையிட்டு, வேதனைப்பட்டேன். கூட்டணி போகிறபோக்கு, இலட்சியத்திலிருந்து நாம் விலகிவிட்டோம்; தளர்ந்துவிட்டோம் என்ற நிலையில் இருக்கிறது. தமிழன் என்ற ரீதியில்தான் அரசியலில் ஈடுபட்டேன். தொடர்ந்தும் தமிழினத்திற்கு சேவைசெய் வேன். நாம் எல்லோரும் பதவிகளை தூக்கிஎறியும் நாள் வந்துவிட்டது.நான் அதற்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதற்காக நன்றாகச் சிந்தித்து முடிவு எடுத்தேன். என் முடிவு தமிழினத்திற்கு ஒரு விடிவு! இப் பதவியிலிருந்து கொண்டு தமிழினத்திற்குச்சேவையாற்ற முடியாது. பொதுச்சபையில் எனக்கு பதவி ஏதும் தரவில்லை என்பதால் இம்முடிவுக்கு வந்ததாக கருதிவிடாதீர்கள். எனக்கு பதவி முக்கியமல்ல. தமிழினத்தின் விடிவு தான் முக்கியம்"

(மா-க)

## தன்மானத்தோடு....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தலில் உங்கள் தலைமையில் ஐ. தே. க. வெற்றிபெறுவதற்கு காரணமாயிருந்த தேர்தல் அறிக்கையானது, தமிழ் மக்களின் குறைபாடுகளைத் தெளிவாக ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அவைகளை தீர்த்துவைக்கவேண்டிய அவசியத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

"எனது கருத்துக்களைத் தாங்கள் ஏற்றுக் கொண்டதாகவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்து வைப்பதில் தாங்கள் அக்கறை கொண்டிருப்பதாகவும்உணர்ந்தோம்.ஒரு நியாமான தீர்வினை உருவாக்க முடியுமென்றும், அதனை நிறைவேற்றுவதன் மூலம் எதிர்நோக்கிக்கொண்டிருந்த நெருக்கடியை தவிர்க்க முடியுமென்றும் நான் கருதினேன்.

"நாடு சுதந்திரமடைந்ததற்குப் பின்னர் இடம்பெற்ற அரசியல்போக்குகளை இங்கே சுருக்மாகக் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

"அடுத்தடுத்துப் பதவிகளுக்கு வந்த அரசாங்கங்களின் குடியேற்றத்திட்டங்கள் தமிழ் மக்களின் சொந்த மண்ணில் எல்லைப்பிராந்தியங்களை தகர்த்துவந்துள்ளன. இது தமிழ் மக்களின் இனப்பெருக்கத்துக்குத் தேவையான நிலப்பகுதிகள் இல்லாமல்போவதற்குக்காரணமாய் அமைந்தது மட்டுமன்றி தாம் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறோம் என்ற உணர்வினையும் அவர்களுக்கு ஏற்படுத்தி வந்துள்ளன.

"வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உருவான புதிய சிங்கள குடியேற்றங்களின் சுற்றுடல்களில் உள்ள தமிழ் மக்கள்மீது அடிக்கடி நடத்தப்பட்ட குறிப்பாக 1958-1977 மற்றும்கடந்த இரு ஆண்டுகளில் நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதல்கள் மேற்குறித்த குடியேற்றத் திட்டங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் கொண்டிருந்த பீதியை உறுதிப்படுத்தியுள்ளன.

"அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களும் அச்சமயத்தில் பொலிஸ், இராணுவம் அங்கு நடந்துகொண்டவிதமும் தமிழ் மக்களை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியுள்ளன".

"1956ல் மக்கள் ஐக்கிய முன்னணி அரசினால் கொண்டு வரப்பட்டு அடுத்து பதவிகளுக்கு வந்த அரசாங்கங்களினால் அமுல் செய்யப்பட்ட சிங்களம் மட்டும் கொள்கையானது, தமிழ்பேசும் மக்களின் உரிமைகளையும் இந்நாட்டில் அவர்களின் அந்தஸ்தையும் படுமோசமாகப் பாதித்திருக்கின்றது.

"அரசாங்கப்பதவிகளுக்கு ஆட்கள் தெரிவு செய்வதிலும் பதவி உயர்வுகள் வழங்குவதிலும் சமீபகாலமாக பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி வழங்குவதிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள பாரபட்சமான கொள்கையானது இந்நாட்டில் கௌரவத்தோடும் தன்மானத்தோடும் தொடர்ந்து வாழமுடியுமா என்று தமிழ் மக்களை சிந்திக்கத்தூண்டியுள்ளது. ஐக்கிய இலங்கையில் மகிழ்ச்சியாக வாழலாம் என்று கருதியவர்கள் மத்தியிலும்கூட இந்தக்கருத்து மேலோங்கியுள்ளது. அனேகர் விரக்தியின் விளிம்புக்கே தள்ளப்பட்டுவிட்டார்கள்.

"அதிகாரத்திலுள்ளவர்கள் இப்பிரச்சினையை பரிசிலிப்பதற்குகூட தீவிரமான முயற்சிகள் எடுக்கவில்லை என்று அறிந்து இவர்கள் வன்முறையை நோக்கியே நாடிச் செல்கிறார்கள்". (மா)

## பேராசிரியர் டேவிட் விவகாரம் ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டது திடீரென மேற்கொள்ளப்பட்ட முடிவு அல்ல. முன்பு ஒரு தடவை இலங்கைக்கு அவர்விஜயம் செய்து, இங்கிருந்து தமிழர் பிரச்னைகள் தொடர்பாக மேற்கத்திய பத்திரிகைகளுக்குப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இது தவிர இவரது கட்டுரைகள் இந்திய வார ஏடான 'இலஸ்.ரட்டட் வீக்லி' யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'சற்றடே றிவியூ' ஆங்கில வாரஏடு ஆகிய பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. தனது கட்டுரைகள் மூலம் இலங்கைக்கு எதிராகவே இவர் செயல்பட்டு வந்துள்ளார். இவரை இலங்கைக்குள் அனுமதிப்பதில்லை என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதாகும்." என்று பாதுகாப்பு அமைச்சின் பத்திரிகைச் செயலாளர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

"ஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழக பேராசிரியர் டேவிட் செல்போர்ன், சர்வதேச மார்க்ஸிய அனுதாபி என்றுகருதப்படுகின்றார். இவர் சர்வதேச மார்க்ஸிய குழுவைச் சேர்ந்தவர்.

"13-07-82-ல் முதல் தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்த இவர், பல இடங்களுக்கும் சென்றார். இங்கிருந்து கொண்டே மேற்கத்திய பத்திரிககளுக்கு இலங்கை அரசுக்கு எதிராக பல கட்டுரைகளை எழுதினார், சிங்கள ஆயுதப் படையினர் தமிழர்களைத் தாககுவதாக தமது கட்டுரைகளில் எழுதினார். இதன்காரணமாக இலங்கைக்குள் இவரை அனுமதிப்பதில்லை என்று அரசு தீர்மானித்திருந்தது. இதன் பின்னர் 19-6-83ல் மீண்டும் இவர் இலங்கைக்கு வந்தார். கொழும்பில் ஒரு ஹோட்டலில் தங்கினார். காலஞ்சென்ற டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் மருமகன் திரு. டெஸ்மன்ட் பெர்னண்டோ இதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார். இவர் ஒரு மார்க்ஸிய வாதி.

"பேராசிரியர் டேவிட் செல்போர்ன் யாழ்ப்பாணம் செல்வதற்கு சட்டத்தரணி எஸ். சந்திரகாசன் ஏற்பாடுகள் செய்திருந்தார்- திரு. டெஸ்மன்ட் சட்டத்தரணி சந்திரகாசனுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்.

"கடந்த ஜூன் மாதம் 19 முதல் 22-ம் திகதிவரை பேராசிரியர் டேவிட் யாழ்ப்பாணத்தில் இருந்திருக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ.அமிர்தலிங்கம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ.யோகேஸ்வரன், மற்றும் பல எம். பி.க்களை அவர் சந்தித்திருக்கின்றார். தமிழீழத்துக்காகப் போராடும் பல பிரமுகர்களைச் சந்தித்து உரையாடியதுடன், கந்தர்மடம் பகுதியில் பல புகைப்படங்களையும் எடுத்திருக்கின்றார். 22-06-83ல் வவனியா சென்றார். அங்கு, வவனியா நகரசபைத்தலைவர், அபிவிருத்திசபைத் தலைவர் ஆகியோரை சந்தித்ததுடன் வவனியாவில் பல இடங்களையும் சென்று பார்த்துள்ளார். புகைப்படங்களும் எடுத்துள்ளார்.

கொழும்பு திரும்பிய பேராசிரியர் டேவிட் அரசாங்கத்துக்கு விரோதமானவர்களைச் சந்தித்துள்ளார். இச்சந்திப்புகளுக்கு சட்டத்தரணி சந்திரகாசன் ஏற்பாடு செய்திருந்தார். தமிழ் ஈழம் சார்பானவர்களையே அவர் சந்தித்திருக்கின்றார்.

அரசு விரோத தமிழ்ஈழ சார்பான சக்திகளையே அவர் சந்தித்து தமது, கட்டுரைகளில் எழுதியிருக்கின்றார். இதன் காரணமாக, இரகசியப் புலனாய்வுத்துறையின் அறிக்கையைத் தொடர்ந்து பேராசியரை உடனடியாக நாடு கடத்துவதென்று தீர்மானித்து கடந்த ஜூன் மாதம் 25-ம் திகதி 'ஏர் லங்கா' விமானம் மூலம் நாடு கடத்தப்பட்டார்" என்று தமது அறிக்கையில் பாதுகாப்பு அமைச்சின் பத்திரிகைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாணவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுதல், கைது செய்யப்படுதல், தமிழ் இளைஞர் பேரவைச் செயயாளர் இரா. பன்னீர்ச்செல்வம், தமிழ் ஈழ விடுதலை அணி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டது ஆகியவற்றுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும்வகையில் பாடசாலைகளையும், பல்கலைக் கழகம், தொழில் நுட்பக் கல்லூரி அனைத்தையும் பகிஷ்கரிக்கும்படி தமிழ் மாணவர் பேரவை கேட்டிருந்ததைத் தொடர்ந்து மாணவர்கள் நேற்றுப் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர், (மா)

## இலங்கைத் தமிழர்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விரும்பும்வரை ஆங்கிலம்ஆட்சிமொழியாக தொடர்ந்து இருக்குமென்ற பிரதமர் நேருவின் உறுதிமொழி தொடர்ந்து பாதுகாக்கப்படும். இன்றைய நிலையில் காமராஜர் போதித்த தேசிய உணர்வினை நாட்டின் சகலரும் பின்பற்றவேண்டும்" என்றும் அவர் மக்களை கேட்டுக்கொண்டார்.

இவ்விழாவில் பாதுகாப்பு அமைச்சர் ஆர். வெங்கட்ராமன், இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (சூ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.